

தமிழ்நாடு அரசு

மூன்றாம் வகுப்பு

மூன்றாம் பருவம்

தொகுதி – 1

தமிழ்

ENGLISH

தமிழ்நாடு அரசு விலையில்லாப் பாடநூல் வழங்கும் திட்டத்தின்கீழ் வெளியிடப்பட்டது

பள்ளிக் கல்வித்துறை

தீண்டாமை மனித நேயமற்ற செயலும் பெருங்குற்றமும் ஆகும்

தமிழ்நாடு அரசு

முதல் பதிப்பு – 2019

திருத்திய பதிப்பு – 2020, 2022, 2023, 2025

மறுபதிப்பு – 2021, 2024

(புதிய பாடத்திட்டத்தின்கீழ் வெளியிடப்பட்ட முப்பருவ நூல்)

விற்பனைக்கு அன்று

பாடநூல் உருவாக்கமும் தொகுப்பும்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்

© SCERT 2019

நூல் அச்சாக்கம்

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்

www.textbooksonline.tn.nic.in

ஓர் அழைப்பு உங்கள் வாழ்க்கையை மாற்றும் (18 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கான 24 × 7 கட்டணமில்லாத் தொலைபேசி எண்கள்)

குழந்தைத் திருமணம், குழந்தைத் தொழிலாளர் போன்ற பாதிப்புகளுக்கு உள்ளாக்கப்படுகிறீர்களா?
மனம், உடல் மற்றும் பாலியல் சார்ந்த துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்படுகிறீர்களா?
பாதுகாப்பற்ற சூழலில் உள்ளீர்களா?
அழையுங்கள் குழந்தை உதவி எண் 1098
உங்கள் விவரங்கள் பிறருக்குத் தெரியாமல் பாதுகாக்கப்படும்

CHILD LINE 1098 NIGHT & DAY

மனம், உடல் மற்றும் பாலியல் சார்ந்த துன்புறுத்தலுக்கு அல்லது அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்படுகிறீர்களா?
பாதுகாப்பற்ற சூழலில் உள்ளீர்களா?
தேர்வு மற்றும் உயர்கல்விக்கு வழிகாட்டுதல் தேவையா?
அழையுங்கள் 14417
உங்கள் விவரங்கள் பிறருக்குத் தெரியாமல் பாதுகாக்கப்படும்

14417
கல்வித் தகவல் மையம்

3rd_Tamil_Term 3.indd 2 25-08-2025 16:50:40

இந்திய அரசமைப்பு

முகப்புரை

இந்திய மக்களாகிய நாம், இந்திய நாட்டினை **இறையாண்மையும் சமநலச்சமுதாயமும் சமயச்சார்பின்மையும் மக்களாட்சிமுறையும்** அமைந்ததொரு **குடியரசாக நிறுவவும்,**

அதன் குடிமக்கள் அனைவரும்

சமுதாய, பொருளியல், அரசியல், **நீதி;**

எண்ணம், அதன் வெளியீடு, கோட்பாடு,

சமயநம்பிக்கை, வழிபாடு இவற்றில் **தன்னுரிமை;**

சமுதாயப்படிநிலை, வாய்ப்புநலம் இவற்றில் **சமன்மை**

ஆகியவற்றை எய்திடச் செய்யவும்;

அவர்கள் அனைவரிடையேயும்

தனி மனிதனின் மாண்பு, நாட்டுமக்களின் ஒற்றுமை,

ஒருமைப்பாடு இவற்றை உறுதிப்படுத்தும்

உடன்பிறப்புரிமையினை வளர்க்கவும்;

உள்ளார்ந்த உறுதியுடையராய்,

நம்முடைய அரசமைப்புப் பேரவையில், 1949 நவம்பர் இருபத்தாறாம் நாளாகிய இன்று, **ஈங்கிதனால், இந்த அரசமைப்பினை ஏற்று, இயற்றி, நமக்கு நாமே வழங்கிக்கொள்கிறோம்.**

3rd_Tamil_Term 3.indd 3 25-08-2025 16:50:41

முகவுரை

குழந்தைகளின் உலகம் வண்ணமயமானது! விந்தைகள் பல நிறைந்தது!! அவர்களின் கற்பனைத்திறன் கானுயிர்களையும் நட்புடன் நடை பயில வைத்திடும். புதியன விரும்பும் அவர்தம் உற்சாக உள்ளம் அ.ிறிணைப் பொருள்களையும் அழகுதமிழ் பேசிடச் செய்திடும்.

அப்புதிய உலகில் குழந்தைகளோடு பயணம் செய்வது மகிழ்ச்சியும் நெகிழ்ச்சியும் நிறைந்தது.

தமிழ்க் குழந்தைகளின் பிஞ்சுக்கரங்கள் பற்றி, இப்புதிய பாடநூல்களின் துணைகொண்டு கீழ்க்காணும் நோக்கங்களை அடைந்திட பெருமுயற்சி செய்துள்ளோம்.

- கற்றலை மனனத்தின் திசையில் இருந்து மாற்றிப் படைப்பின் பாதையில் பயணிக்க வைத்தல்.
- தமிழர்தம் தொன்மை, வரலாறு, பண்பாடு மற்றும் கலை, இலக்கியம் குறித்த பெருமித உணர்வை மாணவர்கள் பெறுதல்.
- தன்னம்பிக்கையுடன் அறிவியல் தொழில்நுட்பம் கைக்கொண்டு மாணவர்கள் நவீன உலகில் வெற்றிநடை பயில்வதை உறுதிசெய்தல்.
- அறிவுத்தேடலை வெறும் ஏட்டறிவாய்க் குறைத்து மதிப்பிடாமல் அறிவுச் சாளரமாய்ப் புத்தகங்கள் விரிந்து பரவி வழிகாட்டுதல்.

பாடநூலின் புதுமையான வடிவமைப்பு, ஆழமான பொருள் மற்றும் குழந்தைகளின் உளவியல் சார்ந்த அணுகுமுறை எனப் புதுமைகள் பல தாங்கி உங்களுடைய கரங்களில் இப்புதிய பாடநூல் தவழும்பொழுது, பெருமிதம் ததும்ப ஒரு புதிய உலகத்துக்குள் நீங்கள் நுழைவீர்கள் என்று உறுதியாக நம்புகிறோம்.

3rd_Tamil_Term 3.indd 4 25-08-2025 16:50:41

நாட்டுப்பண்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காஹே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே ஜய ஹே ஜய ஹே
ஜய ஜய ஜய ஜய ஹே!

– *மகாகவி இரவீந்திரநாத தாகூர்.*

நாட்டுப்பண் – பொருள்

இந்தியத் தாயே! மக்களின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற நீயே எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செய்கிறாய்.

நின் திருப்பெயர் பஞ்சாபையும், சிந்துவையும், கூர்ச்சரத்தையும், மராட்டியத்தையும், திராவிடத்தையும், ஒடிசாவையும், வங்காளத்தையும் உள்ளக் கிளர்ச்சி அடையச் செய்கிறது.

நின் திருப்பெயர் விந்திய, இமயமலைத் தொடர்களில் எதிரொலிக்கிறது; யமுனை, கங்கை ஆறுகளின் இன்னொலியில் ஒன்றுகிறது; இந்தியக் கடலலைகளால் வணங்கப்படுகிறது.

அவை நின்னருளை வேண்டுகின்றன; நின் புகழைப் பரவுகின்றன.

இந்தியாவின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற தாயே!

உனக்கு வெற்றி! வெற்றி! வெற்றி!




3rd_Tamil_Term 3.indd 5 25-08-2025 16:50:42

தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே!
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!
தமிழணங்கே!
உன் சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!

– 'மனோன்மணீயம்' பெ. சுந்தரனார்.



தமிழ்த்தாய் வாழ்த்து – பொருள்

ஒலி எழுப்பும் நீர் நிறைந்த கடலெனும் ஆடையுடுத்திய நிலமெனும் பெண்ணுக்கு, அழகு மிளிரும் சிறப்பு நிறைந்த முகமாகத் திகழ்கிறது பாதக்கண்டம். அக்கண்டத்தில், தென்னாடும் அதில் சிறந்த திராவிடர்களின் நல்ல திருநாடும். பொருத்தமான பிறை போன்ற நெற்றியாகவும், அதிலிட்ட மணம் வீசும் திலகமாகவும் இருக்கின்றன.

அந்தத் திலகத்தில் இருந்து வரும் வாசனைபோல அனைத்துலகமும் இன்பம் பெறும் வகையில் எல்லாத் திசையிலும் புகழ் மணக்கும்படி (புகழ் பெற்று) இருக்கின்ற பெருமைமிக்க தமிழ்ப் பெண்ணே! தமிழ்ப் பெண்ணே! என்றும் இளமையாக இருக்கின்ற உன் சிறப்பான திறமையை வியந்து உன் வயப்பட்டு எங்கள் செயல்களை மறந்து உன்னை வாழ்த்துவோமே! வாழ்த்துவோமே! வாழ்த்துவோமே!

3rd_Tamil_Term 3.indd 6 25-08-2025 16:50:42



தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழி

'நாட்டின் உரிமை வாழ்வையும் ஒருமைப்பாட்டையும் பேணிக்காத்து வலுப்படுத்தச் செயற்படுவேன்' என்று உளமார நான் உறுதி கூறுகிறேன்.

'ஒருபோதும் வன்முறையை நாடேன் என்றும், சமயம், மொழி, வட்டாரம் முதலியவை காரணமாக எழும் வேறுபாடுகளுக்கும் பூசல்களுக்கும் ஏனைய அரசியல் பொருளாதாரக் குறைபாடுகளுக்கும் அமைதி நெறியிலும் அரசியல் அமைப்பின் வழியிலும் நின்று தீர்வு காண்பேன்' என்றும் நான் மேலும் உறுதியளிக்கிறேன்.

உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் என் உடன் பிறந்தவர்கள். என் நாட்டை நான் பெரிதும் நேசிக்கிறேன். இந்நாட்டின் பழம்பெருமைக்காகவும் பன்முக மரபுச் சிறப்புக்காகவும் நான் பெருமிதம் அடைகிறேன். இந்நாட்டின் பெருமைக்குத் தகுந்து விளங்கிட என்றும் பாடுபடுவேன்.

என்னுடைய பெற்றோர், ஆசிரியர்கள், எனக்கு வயதில் மூத்தோர் அனைவரையும் மதிப்பேன்; எல்லாரிடமும் அன்பும் மரியாதையும் காட்டுவேன்.

என் நாட்டிற்கும் என் மக்களுக்கும் உழைத்திட முனைந்து நிற்பேன். அவர்கள் நலமும் வளமும் பெறுவதிலேதான் என்றும் மகிழ்ச்சி காண்பேன்.



3rd_Tamil_Term 3.indd 7 25-08-2025 16:50:42


முன்னுரை

குழந்தைகள் அற்புதமானவர்கள்!

அவர்கள் பல்வேறு சூழல்களிலிருந்து பள்ளிக்கு வருகின்றனர். எல்லாக் குழந்தைகளும் தனித்திறன் என்னும் முத்துகளைத் தன்னகத்தே கொண்ட சிப்பிகள். அச்சிப்பிகளுக்குள் பொதிந்து கிடக்கும் திறன்களாகிய முத்துகளைக் கண்டு வெளிக்கொணர்வதே உண்மையான கல்வி.

இதுவரை கற்றுணர்ந்த அடிப்படை மொழித்திறன்களை நினைவுகூர்ந்து வெளிப்படுத்தும் வகையில் '**என் நினைவில்**' என்கிற தலைப்பில் ஆர்வமூட்டும் செயல்பாடுகள் கொடுக்கப்பட்டுள்ளன.





இப்பாடநூல் தமிழையும் தமிழர்களையும் போற்றும்வகையில் அமைந்துள்ளதுடன் குழந்தையின் விருப்பம், மனவளர்ச்சி, சமுதாய நோக்கு, பண்பாடு முதலியவற்றையும் கருத்தில்கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. இதில் குழந்தைகளின் கண்ணையும் கருத்தையும் கவரும் வண்ணப்படங்கள், நற்பண்புகளை வளர்க்கும் கதைகள், படக்கதைகள், இசையோடு ஓசை நயமிக்க இனிய பாடல்கள் போன்றவை இடம்பெற்றுள்ளன.

தங்கள் ஆசிரியர்களோடு குழந்தைகள் தயக்கமின்றிக் கலந்துரையாடுவதற்கான பகுதியாகச் **சிந்தித்துப் பேசலாமா?** பகுதி அமைக்கப்பட்டுள்ளது.



கருத்தை வெளிப்படுத்துவது பேச்சு. எனவே பேச்சுவளத்தை மேம்படுத்தும் சூழல்களும் வழிகாட்டுதலுடன் கூடிய பேசுவதற்கான வாய்ப்புகளும் அதிகம் வழங்கப்பட்டுள்ளன.



3rd_Tamil_Term 3.indd 8 25-08-2025 16:50:43

பாடநூல் பயிற்சிகளாக,

- பாடத்துடன் தொடர்புடைய பயிற்சிகள்
- மொழி விளையாட்டுகள்
- திறன் சார்ந்த பயிற்சிகள்

ஆகியன கொடுக்கப்பட்டுள்ளன.



ஒவ்வொரு குழந்தையின் படைப்புத்திறன், புதியன உருவாக்கும் சிந்தனை ஆகியவற்றை வளர்க்க உதவும் கலையும் கைவண்ணமும் பகுதி இடம்பெற்றுள்ளது.

திட்டமிட்டு ஒவ்வொரு செயலையும் செய்து முடிக்க உதவும் செயல்திட்டம் அளிக்கப்பட்டுள்ளது.





புதிய செய்திகளைக் குழந்தைகள் அறிந்துகொள்ள உதவும்வகையில் அறிந்துகொள்வோம் பகுதி அமைந்துள்ளது.

செயல்பாடுகளாக,

- ஆசிரியரோடு இணைந்து கற்கும் பகுதி
- இணைந்து குழுவினராகச் செயல்படும் பகுதி
- தனியே செய்து முடிக்கும் செயல்பாடுகள்
- மதிப்பீட்டுச் செயல்பாடுகளுக்கான பகுதி

ஆகியன இடம்பெற்றுள்ளன.

புதிய பாடநூலில் இவைபோன்ற செயல்பாடுகள் இடம்பெற்றுள்ளன.

கற்பிக்கவேண்டிய திறன்கள் அந்தந்தப் பாடப்பகுதியிலும் பெறவேண்டிய கற்றல் விளைவுகள் பாடநூலின் இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ளன. விழுமியங்களும் வாழ்வியல் திறன்களும் பாடப்பகுதிகளில் பேசப்பட்டுள்ளன.

மகிழ்ச்சியான வகுப்பறைச் சூழலாலும் இனிமையான கற்றல் கற்பித்தல் முறைகளாலும் ஆசிரியர்களின் அனுபவ ஆற்றலாலும் அறிவார்ந்த சமூகம் அமையட்டும்.

வாழ்த்துகள்..!

ஆக்கியோர்.

3rd_Tamil_Term 3.indd 9 25-08-2025 16:50:44

பொருளடக்கம்

வ. எண்	பாடத்தலைப்பு	பக்க எண்	மாதம்
	என் நினைவில்	1	ஜனவரி
1	செந்தமிழ் நாடு	4	ஜனவரி
2	தனித்திறமை	7	ஜனவரி
3	நட்பே உயர்வு	12	பிப்ரவரி
4	விண்ணின் கொடை	16	பிப்ரவரி
5	முயற்சி வெல்லும்!	19	மார்ச்
6	அறிவூட்டும் தொலைக்காட்சி	23	மார்ச்
7	நல்வழி	27	ஏப்ரல்
8	பட விளக்க அகரமுதலி	29	ஏப்ரல்
	வந்த பாதை	31	ஏப்ரல்



மின் நூல்


மதிப்பீடு


3rd_Tamil_Term 3.indd 10 25-08-2025 16:50:45


என் நினைவில்

முடிவெடுப்போமா?

என்னுடைய முடிவைத் தேர்ந்தெடுத்து ✓ குறியிடுவேன்









புதிருக்கான விடையைக் கண்டறிந்து எழுதுவோம்

- வால் இருக்கும்.
- உயரத்தில் பறக்கும்.
- ஆனால், உயிர் இருக்காது.



- ஒரு வகை காய்.
- பச்சை வண்ணத்தில் இருக்கும்.
- கசப்பாக இருக்கும்.




- காட்டில் வாழும்.
- நான்கு கால்கள் உண்டு.
- துள்ளி ஓடும்.



3rd_Tamil_Term 3.indd 1 25-08-2025 16:50:48



3rd_Tamil_Term 3.indd 2 25-08-2025 16:50:49



- பிடித்த விளையாட்டுகளின் அருகிலுள்ள நட்சத்திரங்களுக்கு வண்ணமிடுங்கள்.
- படத்தைப் பார்த்துத் தொடர்களை எழுதுங்கள்.

வீட்டின்மேல் குருவிகள் இருக்கின்றன.

சிறுவர்கள் பச்சைக்குதிரை விளையாடுகின்றனர்.

கொடியில் துணி காய்கிறது.

3rd_Tamil_Term 3.indd 3 25-08-2025 16:50:50

1 செந்தமிழ் நாடு



செந்தமிழ் நாடெனும் போதினிலே – இன்பத்
தேன் வந்து பாயுது காதினிலே – எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே – ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே

காவிரி தென்பெண்ணை பாலாறு – தமிழ்
கண்டதோர் வையை பொருனைநதி – யென
மேவிய ஆறு பலவோடத் – திரு
மேனி செழித்த தமிழ்நாடு

வள்ளுவன் தன்னை உலகினுக்கே – தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு
நெஞ்சை அள்ளும் சிலப்பதி காரமென் றோர்மணி
ஆரம் படைத்த தமிழ்நாடு

– சுப்பிரமணிய பாரதியார்

சொல்லும் பொருளும்

செந்தமிழ் – செம்மையான தமிழ்

மேவிய – சிறந்த / பரந்த

மேனி – உடல்

மணி ஆரம் – ஒரு வகை அணிகலன்

பாடல் பொருள்

செந்தமிழ் நாடு என்னும் பெயரைக் கேட்கும்போது காதில் இனிமை வந்து சேர்கிறது. இது எங்கள் தந்தையர் நாடு என்று பேசும்போது மூச்சில் சக்தி பிறக்கிறது.

காவிரி, தென்பெண்ணை, பாலாறு, வைகை, தாமிரபரணி ஆகிய ஆறுகள் பாய்வதால் வளமை அடைந்த நிலப்பரப்பைக் கொண்டது தமிழ்நாடு.

திருவள்ளுவர் இயற்றிய திருக்குறளை உலக மக்களுக்குத் தந்து வானளாவிய புகழ்கொண்டது தமிழ்நாடு. மனத்தைக் கவரும் சிலப்பதிகாரம் என்னும் மணி ஆரத்தைத் தந்தது தமிழ்நாடு.

3rd_Tamil_Term 3.indd 4 25-08-2025 16:50:51

பயிற்சி

சரியான விடையைத் தெரிவு செய்வேன்

1. செந்தமிழ் என்ற சொல்லின் பொருள் _____

(அ) செந்நிறத்தமிழ் (ஆ) பைந்தமிழ்

(இ) செம்மையான தமிழ் (ஈ) செய்தமிழ்

2. மணி + ஆரம் இச்சொற்களைச் சேர்த்து எழுதக் கிடைப்பது _____

(அ) மணியோரம் (ஆ) மணியாரம்

(இ) பணியாரம் (ஈ) மணிவாரம்

3. நாடு + எனும் இச்சொற்களைச் சேர்த்து எழுதக் கிடைப்பது _____

(அ) நாடெனும் (ஆ) நாடேனும்

(இ) நாடனும் (ஈ) நாடனும்

4. பொருனைநதி இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____

(அ) பொரு + னைநதி (ஆ) பொரு + நதி

(இ) பொருனை+ நதி (ஈ) பொருள் + நதி

வினாக்களுக்கு விடையளிப்பேன்

1. செந்தமிழ் நாடு – இப்பாடலை இயற்றியவர் யார்?

2. எந்தெந்த ஆறுகளால் தமிழ்நாடு வளம் அடைந்ததாக இப்பாடல் குறிப்பிடுகிறது?

3. எதனைக் கேட்டதும் காதில் இனிமை வந்து சேர்கிறது?

4. இப்பாடலில் மணியாரம் என்று குறிப்பிடப்படுவது எது?

3rd_Tamil_Term 3.indd 5 25-08-2025 16:50:51

திணைகள் அறிவோமா!

உயர்திணை



மனிதர்களை உயர்திணை என்று கூறுவர்.

உயர்திணைப் பெயர்கள் – மனிதர்களைக் குறிக்கும் அம்மா, அப்பா, அண்ணன், குழலி, பாபு போன்ற பெயர்கள் உயர்திணைப் பெயர்கள் ஆகும்.

அஃறிணை

மனிதர் அல்லாத உயிருள்ள மற்றும் உயிரற்ற பொருள்களை அஃறிணை என்று கூறுவர்.

அஃறிணைப் பெயர்கள் – பூனை, கிளி, எறும்பு, மரம், மின்விசிறி போன்ற பெயர்கள் அஃறிணைப் பெயர்கள் ஆகும்.



படிப்போம்; எழுதுவோம்

நீலா, தன் அத்தை வீட்டிற்குச் சென்றாள். நாய்க்குட்டி துள்ளிக்கொண்டு ஓடி வந்தது. கன்றுக்குட்டி, ஆடு இரண்டும் பேசிக்கொள்வது போல அருகருகே நின்றிருந்தன. செடியில் நிறைய பூக்கள் பூத்திருந்தன. கொய்யாமரம் நிறைய பழங்களுடன் இருந்தது. "வா நீலா" என்று மாமா வரவேற்றார்.



நீலா, தன் அத்தை வீட்டில் பார்த்த...


உயர்திணைப் பெயர்கள்	அஃறிணைப் பெயர்கள்

3rd_Tamil_Term 3.indd 6 25-08-2025 16:50:53


2 தனித்திறமை











3rd_Tamil_Term 3.indd 7 25-08-2025 16:50:53



3rd_Tamil_Term 3.indd 8 25-08-2025 16:50:54











சிந்தித்துப் பேசலாமா?

ஒரு சில திறமைகளை உயர்வாகவும் பிறவற்றைத் தாழ்வாகவும் நினைப்பது சரியா?

- எனது திறமைகள்
- என் நண்பர்களின் திறமைகள்



3rd_Tamil_Term 3.indd 9 25-08-2025 16:50:54

பயிற்சி

சரியான விடையைத் தெரிவு செய்வேன்

1. எதை + பார்த்தாலும் இதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் _____

   (அ) எதைபார்த்தாலும் (ஆ) எதபார்த்தாலும்

   (இ) எதைப்பார்த்தாலும் (ஈ) எதைபார்தாலும்

2. இரவுக்காவல் இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____

   (அ) இரவுக் + காவல் (ஆ) இரவு + காவல்

   (இ) இரவுக்கு + காவல் (ஈ) இர + காவல்

3. படைத்தளபதி இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____

   (அ) படைத் + தளபதி (ஆ) படை + தளபதி

   (இ) படையின் + தளபதி (ஈ) படைத்த + தளபதி

4. பகைவர்கள் இச்சொல்லின் எதிர்ச்சொல் _____

   (அ) நண்பர்கள் (ஆ) எதிரிகள்

   (இ) அயலவர்கள் (ஈ) சகோதரர்கள்

வினாக்களுக்கு விடையளிப்பேன்

1. காட்டில் விலங்குகளின் கூட்டம் யார் தலைமையில் நடைபெற்றது?

2. புலி அரசர், படைத்தளபதி பொறுப்பை யாருக்குக் கொடுத்தார்?


3. ஆமைக்கு என்ன பதவி கொடுக்கப்பட்டது?

4. இந்தக் கதையின்மூலம் நீங்கள் அறிந்துகொள்வது யாது?

3rd_Tamil_Term 3.indd 10 25-08-2025 16:50:54

சூழலுக்கு ஏற்ற குறியீட்டை வரைந்து எழுதுவோம்

மகிழ்ச்சி	கோபம்	வருத்தம்
வியப்பு	அச்சம்	அழுகை



கோபம்







புத்தாடை அணியும்போது — மகிழ்ச்சி

மிகப்பெரிய யானையைப் பார்த்தால்

யாரேனும் கீழே விழுவதைக் கண்டால்

திடீரெனப் பாம்பைக் கண்டால்

3rd_Tamil_Term 3.indd 11 25-08-2025 16:50:57

3 நட்பே உயர்வு

முயலும் மானும் நெடுநாள் நண்பர்கள். அவை அடர்ந்த காட்டில் வாழ்ந்து வந்தன. மான் பார்ப்பதற்குக் கொழுகொழுவென்று இருந்தது. மானை வேட்டையாட ஒரு நரி எண்ணியது.

ஒருநாள் நரி, பசியோடு இரையைத் தேடியது. அப்போது மான் தனியாக இருப்பதைப் பார்த்தது. நரி, மானின் அருகில் வந்தது. மான் பயந்து ஓடப் பார்த்தது. "நண்பா நில், உன் நண்பன் முயலுக்கு ஆபத்து. நீதான் முயலின் நெருங்கிய நண்பன் ஆயிற்றே, அதனால்தான் உன்னிடம் சொல்ல வந்தேன்"என்றது நரி."அப்படியா! முயலுக்கு என்ன ஆனது? அது எங்கே இருக்கிறது?" என்று கேட்டது மான்.

'அடடா! மான் நம்மிடம் சிக்கிக் கொண்டது' என்று மகிழ்ந்தது நரி. மானை முதலில் அதன் இடத்திற்கு அழைத்துச் சென்றுவிட வேண்டும் என்று நினைத்தது நரி. "வா! உன்னை அழைத்துச் செல்கிறேன்" என்று கூறி வேகமாக நடக்கத் தொடங்கியது. மானும் பின்தொடர்ந்தது.

இவை செல்வதை முயல் பார்த்துவிட்டது. நரியுடன் மான் பதற்றமாகச் செல்கிறதே! நரி மானை ஏமாற்றி அழைத்துச் செல்கிறதோ? என்ற சந்தேகம் முயலுக்கு எழுந்தது. நரியால் மானுக்கு ஆபத்து என்ற பயம் முயலுக்கு வந்தது. அதனால் வேகவேகமாக ஓடியது.



3rd_Tamil_Term 3.indd 12 25-08-2025 16:50:58

முயல் வருவதை நரி பார்த்துவிட்டது. முயலை மான் பார்க்கக்கூடாது என்பதற்காக வேகத்தை அதிகரித்தது. முயல் பலமுறை அழைத்தது. மான் பதற்றத்தில் இருந்ததால் அழைத்தது அதன் காதுகளில் விழவே இல்லை. ஏதோ ஆபத்து! இதை நாம் தடுத்து நிறுத்தியாக வேண்டும் என்று நினைத்தது முயல். அதனால் எவ்வளவு முடியுமோ அவ்வளவு வேகமாக ஓடி வந்தது.

ஓடி வந்த முயல் எப்படியோ மானின் அருகே வந்துவிட்டது, "மான் நண்பா எங்கே செல்கிறாய்?" என்று கேட்டது. மான் முயலைப் பார்த்தவுடன், அட நம் நண்பன் இங்கே நிற்கிறானே! அவனுக்கு எதுவும் ஆபத்தில்லை போலிருக்கிறதே என்று சிந்தித்தது. சட்டென்று அதற்கு நரியின் திட்டம் புரிந்துவிட்டது.

மானும் முயலும் ஒன்றை ஒன்று பார்த்துக் கொண்டன. ஒரே நேரத்தில் இரண்டும் இருவேறு திசைகளில் வேகமாக ஓடத் தொடங்கின. நரி, மானைப் பிடிப்பதா? முயலைப் பிடிப்பதா? என்ற குழப்பத்தில் இரண்டையும் தவறவிட்டது. இரண்டும் ஓடித் தப்பித்தன. முயலும் மானும் தம் நட்பினை எண்ணி மகிழ்ந்தன.



சிந்தித்துப் பேசலாமா?

நண்பர்களுக்கு உதவுவது குறித்துக் கலந்துரையாடுங்கள்.

எனது நண்பர்

என் மேடை!

என் பேச்சு!

3rd_Tamil_Term 3.indd 13 25-08-2025 16:50:59

பயிற்சி

சரியான விடையைத் தெரிவு செய்வேன்

1. இரை என்ற சொல்லின் பொருள் _____

(அ) உணவு (ஆ) இருப்பிடம்

(இ) மலை (ஈ) இறைவன்

2. மகிழ்ச்சியுடன் இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____

(அ) மகிழ்ச்சி + யுடன் (ஆ) மகிழ்ச்சி + உடன்

(இ) மகிழ் + உடன் (ஈ) மகிழ்ச் + சியுடன்

3. ஆபத்தில்லை இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____

(அ) ஆபத்து + இல்லை (ஆ) ஆபத் + தில்லை

(இ) ஆபத்து + தில்லை (ஈ) ஆபத் + இல்லை

4. இங்கே என்ற சொல்லின் எதிர்ச்சொல் _____

(அ) இடம் (ஆ) காடு

(இ) எங்கே (ஈ) அங்கே

5. கதையில் வரும் நண்பர்கள் _____, _____

(அ) முயல், நரி (ஆ) நரி, மான்

(இ) மான், முயல் (ஈ) நரி, புலி

வினாக்களுக்கு விடையளிப்பேன்


1. யாருக்கு ஆபத்து வந்ததாக நரி கூறியது?

2. முயல் தூரத்தில் வருவதைப் பார்த்துவிட்ட நரி என்ன செய்தது?

3. மானும் முயலும் இருவேறு திசைகளில் ஓடியது ஏன்?

3rd_Tamil_Term 3.indd 14 25-08-2025 16:50:59

படிப்போம்;புரிந்துகொண்டு விடைதருவோம்



1. குழந்தைகள் எந்த விழா குறித்துப் பேசுகிறார்கள்?

   1. பொங்கல் விழா 2. ஆண்டுவிழா 3. விளையாட்டு விழா (1) (2) (3)

2. விழாவில் அனைவரையும் வரவேற்கப்போவது யார்?

   1. முகிலன் 2. யாழினி 3. நிலா (1) (2) (3)

3. கதிர் பங்குபெறும் நிகழ்ச்சி எது?

   1. கோலாட்டம் 2. நாடகம் 3. மாறுவேடப்போட்டி (1) (2) (3)

4. மாறுவேடப் போட்டியில் கலந்துகொள்பவர் யார்?

   1. முகிலன் 2. அப்துல் 3. யாழினி (1) (2) (3)

5. விழாவில் நாடகம் உண்டா? ✓ செய்க.

   ஆம் / இல்லை

நான் கலந்துகொள்ள விரும்பும் ஒரு நிகழ்ச்சி

3rd_Tamil_Term 3.indd 15 25-08-2025 16:51:02

4 விண்ணின் கொடை

மழைநீர் வெள்ளம் ஓடியே
மண்ணில் வீணாய்ச் செல்லுதே
உழைப்பின் வியர்வை போலதை
உயர்வாய் எண்ண வேண்டுமே !

பொன்னும் பொருளும் போலவே
பொழியும் நீரும் செல்வமே
விண்ணின் கொடை என்பதில்
வியப்பு ஒன்றும் இல்லையே !

மனிதர் பறவை விலங்குகள்
மகிழ்ந்து வாழத் தேவையே
ஓடும் நீரைத் தேக்கியே
உலகின் பசியைத் தீர்ப்போமே!



சொல்லும் பொருளும்

விண் – வானம்

தேக்கியே – தேக்கி வைத்தே

கொடை – எதிர்பார்ப்பு இல்லாமல் கொடுப்பது

எண்ண வேண்டும் – நினைக்க வேண்டும்



சிந்தித்துப் பேசலாமா?

நீரின் முக்கியத்துவம் குறித்துக் கலந்துரையாடுங்கள்.

மழைநாளில் நான்...



3rd_Tamil_Term 3.indd 16 25-08-2025 16:51:02

பயிற்சி

சரியான விடையைத் தெரிவு செய்வேன்

1. விண்ணின் கொடை என்பது _____

(அ) உழைப்பு (ஆ) வியர்வை

(இ) வானம் (ஈ) மழை

2. மழை + நீர் இச்சொற்களைச் சேர்த்து எழுதக் கிடைப்பது _____

(அ) மழையின் நீர் (ஆ) மழைனீர்

(இ) மழைநீர் (ஈ) மழைணீர்

4. போலதை இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____

(அ) போல் + அதை (ஆ) போல + தை

(இ) போல + அதை (ஈ) போல் + தை

3. உயர்வு இச்சொல்லுக்குரிய எதிர்ச்சொல் _____

(அ) தாழ்வு (ஆ) உழைப்பு

(இ) வாழ்வு (ஈ) வியப்பு

பாடல் வரிகளைப் பொருத்துவேன்

1. வளமும் நலமும் – வேண்டுமே

2. இல்லத்தில் நீரை – சேமிப்போம்

3. உற்ற துணை – மழையாகுமே

4. உயர்வாய் எண்ண – நிறைந்திட

3rd_Tamil_Term 3.indd 17 25-08-2025 16:51:03

முதல் எழுத்து ஒன்றி வரும் சொற்களை எடுத்து எழுதுவேன்

குட்டி யானை

அழகுக் குட்டி யானை
அசைந்து வரும் யானை
குட்டி வாலை ஆட்டும்
குறும்புக்கார யானை
கட்டிக் கரும்பைக் கண்டால்
கண்ணைச் சிமிட்டும் யானை



இரண்டாம் எழுத்து ஒன்றி வரும் சொற்களை எடுத்து எழுதுவேன்

சிட்டுக் குருவி

சிட்டுச் சிட்டுக் குருவிக்கு
பட்டுப் பட்டு இறகுகள்
எங்கு பறந்து செல்கிறாய்?
அங்கு நானும் வருகிறேன்!
சின்ன அழகுக் குருவியே
தின்ன எதுவும் வேண்டுமா?
செல்லம் உனக்கு நானுமே
நெல்லை அள்ளித் தரட்டுமா?



செயல்திட்டம்



மழை பற்றிய பாடலைக் கேட்டு / படித்து எழுதி வருக.

3rd_Tamil_Term 3.indd 18 25-08-2025 16:51:03

5 முயற்சி வெல்லும்!




அது மூன்றாம் வகுப்பு. ஆசிரியர் ஒரு போட்டியை அறிவித்தார். "அடுத்த அறையில் பெட்டி ஒன்று உள்ளது. அந்தப் பெட்டியினை இங்கு எடுத்து வருபவரே வெற்றியாளர்" என்று அறிவித்தார்.

மாணவர்கள் அனைவரும் ஆவலுடன் பெட்டி வைக்கப்பட்டிருந்த அறைக்குள் சென்றனர். அந்தப் பெட்டி அளவில் பெரியதாக இருந்தது. அதனால் தூக்க இயலாது என்று போட்டியிலிருந்து பலர் விலகிவிட்டனர். சிலர், பெட்டிக்கு அருகே சென்றனர். பெட்டியைத் தூக்க இயலவில்லை என்றால் மற்றவர்கள் சிரிப்பார்களே என்று விலகிவிட்டனர். கவியரசி என்ற மாணவி மட்டும் பெட்டியின் அருகில் சென்றாள். பெட்டியினை நகர்த்த முயன்றாள். பெட்டி நகர்ந்தது. எளிதாகத் தூக்க முடிந்தது. கவியரசி பெட்டியினைத் தூக்கிக்கொண்டு வந்தாள். வகுப்பறையில் வைத்தாள்.

அனைவரும் அவளை வியப்புடன் பார்த்தனர். சிலர் ஓடிச்சென்று பெட்டியினைத் தூக்கிப் பார்த்தனர். தயக்கம் விலகியது. பெட்டி, தூக்குவதற்கு எளிதாகவே இருந்தது.

3rd_Tamil_Term 3.indd 19 25-08-2025 16:51:04



ஆசிரியர் மாணவர்களை அழைத்தார். "முதலில் நீங்கள் ஏன் பெட்டியைத் தூக்க முன்வரவில்லை?" என்று கேட்டார். "பெட்டி பெரியதாக இருந்ததால், தூக்க முடியாது என்று நினைத்தோம்" என்றனர். கவியரசியிடம் "நீ ஏன் பெட்டியைத் தூக்கிப் பார்க்க முடிவு எடுத்தாய்?" என்று ஆசிரியர் கேட்டார். "போட்டியே பெட்டியைத் தூக்குவதுதானே? தூக்கிப்பார்க்காமலேயே எப்படி முடிவு செய்ய முடியும்? முயற்சி செய்து பார்க்கலாம் என்று நினைத்தே தூக்கினேன்" என்றாள் கவியரசி.

ஆசிரியர் பிற மாணவர்களைப் பார்த்து "இப்போது என்ன நினைக்கிறீர்கள்?" என்று கேட்டார். அவர்கள் "தோல்வியின் அடையாளம் தயக்கம்; வெற்றியின் அடையாளம் முயற்சி என்பதைப் புரிந்து கொண்டோம்" என்றனர். "அடடா அருமை! கவியரசிக்கு நாம் பரிசளித்து வாழ்த்தலாமே" என்றார் ஆசிரியர். உடனே வகுப்பறை முழுவதும் கைதட்டல் ஒலி கேட்டது.






சிந்தித்துப் பேசலாமா?

எதிலும் வெற்றி, தோல்வி குறித்து வருத்தப்படாமல் ஆர்வத்துடன் பங்கேற்பது குறித்துக் கலந்துரையாடுங்கள்.

நான் ஆர்வத்துடன் பங்கேற்ற செயல் / போட்டி



3rd_Tamil_Term 3.indd 20 25-08-2025 16:51:05

பயிற்சி

சரியான விடையைத் தெரிவு செய்வேன்

1. இயலவில்லை என்ற சொல் உணர்த்தும் பொருள் _____

(அ) முடியும் (ஆ) செய்யலாம்

(இ) முடியவில்லை (ஈ) உருவாக்குதல்

2. வகுப்பறை என்ற சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____

(அ) வகுப் + பறை (ஆ) வகுப்பு + அறை

(இ) வகு + அறை (ஈ) வகுப் + அறை

3. பரிசளித்து என்ற சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

_____

(அ) பரிசு + அளித்து (ஆ) பரி + அளித்து

(இ) பரிசை + அளித்து (ஈ) பரிசும் + அளித்து

4. பெரிய என்ற சொல்லின் எதிர்ச்சொல் _____

(அ) சிறிய (ஆ) நிறைய

(இ) அதிகம் (ஈ) எளிய

5. வெற்றி என்ற சொல்லின் எதிர்ச்சொல் _____

(அ) சாதனை (ஆ) மகிழ்ச்சி

(இ) நன்மை (ஈ) தோல்வி

வினாக்களுக்கு விடையளிப்பேன்

1. ஆசிரியர் அறிவித்த போட்டி என்ன?

2. மாணவர்கள் பலரும் போட்டியிலிருந்து ஏன் விலகினர்?

3. கவியரசியின் வெற்றிக்குக் காரணம் என்ன?

3rd_Tamil_Term 3.indd 21 25-08-2025 16:51:05

முதல் எழுத்து ஒன்றி வரும் சொற்களை எழுதுவேன்

எதிர்ச்சொல்எழுதுவேன்

பனிக்கட்டி குளிர்ச்சியாய் இருக்கும்.

நெருப்பு _____ இருக்கும்.






பூனை மேசையின் மேல் இருந்தது.

எலி மேசையின் _____ இருந்தது.




தங்கை _____ சென்றாள்.

அண்ணன் உள்ளே வந்தான்.

சிறுமி பேருந்தில் _____

சிறுவன் பேருந்திலிருந்து இறங்கினான்.






செயல்திட்டம்

விடாமுயற்சியால் உயர்ந்த ஒருவர் பற்றிய செய்திகளைத் தொகுத்து எழுதி வருக.

3rd_Tamil_Term 3.indd 22 25-08-2025 16:51:10

6 அறிவூட்டும் தொலைக்காட்சி

இளவரசி, பூங்குழலி இருவரும் தோழிகள். அன்று பள்ளி முடிந்து வீடு திரும்பினர். அப்பொழுது வானில் வானூர்தி ஒன்று பறந்து கொண்டிருந்தது. சிறிது நேரத்தில் கருமேகங்கள் சூழ்ந்தன. இடிஇடிக்கத் தொடங்கியது. மழை பெய்தது.

இளவரசி : நாம் வீட்டிற்குச் செல்வதற்குள் நனைந்துவிடுவோம் அதோ, அந்தக் கடையில் நின்றுவிட்டு, மழைவிட்டதும் செல்வோமா?

பூங்குழலி : சரி, இந்த வானூர்திகள் மழையில்கூட வானில் பறக்கின்றனவே. அவற்றின் பாதையை இந்தக் கருமேகங்கள் மறைக்காதா?

இளவரசி : மறைக்காது, ஏனெனில், வானூர்திகள் கருமேகங்களைத் தாண்டி உயரத்தில் பறக்கின்றன.

பூங்குழலி : அது எப்படி உனக்குத் தெரியும்?

இளவரசி : தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் இதுபற்றி விரிவாகக் கூறினார்கள்.

பூங்குழலி : அப்படியா? தொலைக்காட்சியில் இதுபற்றியெல்லாம் சொல்கிறார்களா?


இளவரசி : ஆம். பார்ப்பதற்கு மிகவும் ஆர்வமாக இருந்தது.

பூங்குழலி : கேட்பதற்கு வியப்பாக இருக்கிறதே! சரி, தூறலாகத்தான் இருக்கிறது. பேசிக்கொண்டே செல்வோமா?

இளவரசி : கொஞ்சம் பொறு, பூங்குழலி. இடிச்சத்தம் காதைப் பிளக்கிறது.



3rd_Tamil_Term 3.indd 23 25-08-2025 16:51:11



பூங்குழலி : இடிதானே இடிக்கிறது. மழை, பெரிதாகப் பெய்யவில்லை. மழை வந்தால் வழியில் உள்ள மரத்தடியில் நின்று விடலாமே!

இளவரசி : இல்லை பூங்குழலி! மழை நேரங்களில் மரத்தடியில் நிற்கக்கூடாது. இடிதாக்கும் வாய்ப்பு அதிகம். உயிர்களுக்குப் பேராபத்து ஏற்படும். இதைத் தொலைக்காட்சிச் செய்தியில் தெரிந்துகொண்டேன்.

பூங்குழலி : ஓ! வேறு என்னவெல்லாம் நீ தொலைக்காட்சியில் பார்த்திருக்கிறாய்?

இளவரசி : பொம்மைப் படங்கள், விளையாட்டு நிகழ்ச்சிகள், செய்து பார்ப்போம் போன்ற நிகழ்ச்சிகளைப் பார்த்திருக்கிறேன்.

பூங்குழலி : தொலைக்காட்சி என்றாலே திரைப்படம், பாடல்கள், நாடகத் தொடர்கள் போன்றவற்றையே பார்ப்பேன். ஆனால், புதிய, புதிய செய்திகளை அறிந்துகொள்ளத் தொலைக்காட்சி உதவும் என்பதைப் புரிந்துகொண்டேன். இனி, நானும் அறிவூட்டும் நிகழ்ச்சிகளைப் பார்த்துப் பயனடைவேன்.

இளவரசி : மகிழ்ச்சி. இனி, புதுப்புதுச் செய்திகளை அறிந்து கொள்வோம். தோழிகளுக்கும் நாம் சொல்லலாம். சரி, இப்போது மழை நின்றுவிட்டது; வா வீட்டுக்குப் போகலாம்.



அறிவை வளர்க்கும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் குறித்துக் கலந்துரையாடுங்கள்.

தொலைக்காட்சி பார்த்து நான் தெரிந்து கொண்டவை



3rd_Tamil_Term 3.indd 24 25-08-2025 16:51:11

பயிற்சி

சரியான விடையைத் தெரிவு செய்வேன்

1. வானூர்தி பறப்பது பற்றிய செய்தியைத் _____ வாயிலாக இளவரசி அறிந்து கொண்டாள்.

   அ) கணினி ஆ) தொலைக்காட்சி

   இ) வானொலி ஈ) தொலைபேசி

2. ஆர்வம் இச்சொல்லின் பொருள் _____

   அ) வெறுப்பு ஆ) மறுப்பு

   இ) மகிழ்ச்சி ஈ) விருப்பம்

3. பயன் + அடைவேன் இச்சொல்லைச் சேர்த்து எழுதக் கிடைப்பது _____

   அ) பயனடைவேன் ஆ) பயனைஅடைவேன்

   இ) பயன்அடைவேன் ஈ) பயனஅடைவேன்

4. கருமேகம் இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____

   அ) கரு + மேகம் ஆ) கருமை + மேகம்

   இ) கருத்த + மேகம் ஈ) கருப்பு + மேகம்

வினாக்களுக்கு விடையளிப்பேன்

1. பூங்குழலியும் இளவரசியும் வானத்தில் எதைக் கண்டனர்?

2. இடி, மழை வந்தால் மரத்தடியில் ஏன் ஒதுங்கி நிற்க கூடாது?

3. நீங்கள் தொலைக்காட்சியில் பார்க்கும் நிகழ்ச்சிகள் எவை?

3rd_Tamil_Term 3.indd 25 25-08-2025 16:51:11

ஒருமை, பன்மை அறிவோமா!

ஒரு பொருளை மட்டும் குறிப்பது **ஒருமை**.

ஒன்றுக்கு மேற்பட்ட எண்ணிக்கையில் உள்ள பொருள்களைக் குறிப்பது **பன்மை**.

ஒருமைக்குரிய பன்மைச் சொல்லை எழுதுவோம்



பந்து	பந்துகள்
ஆமை	
முயல்	
பூனை	



பூ	பூக்கள்
விழா	
பசு	
வினா	





படம்	படங்கள்
மரம்	
சிங்கம்	
காகம்	



பல்	பற்கள்
கல்	
சொல்	
புல்	

3rd_Tamil_Term 3.indd 26 25-08-2025 16:51:12

7 நல்வழி



சொல்லும் பொருளும் : அடி சுடும் – பாதங்களைச் சுடும்

நல்கூர்ந்தார் – வறுமையில் உள்ளவர்

இசைந்து – ஒப்புக்கொண்டு

பாடல் பொருள்

ஆற்றில் நீர் வற்றியதால், அதன் வறண்ட மணல்பகுதி, வெப்பத்தால் சூடேறி நடப்பவரின் பாதங்களைச் சுடும். அத்தகைய நிலையிலும் அந்த ஆற்று மணலைத் தோண்டுகின்றபோது, சுரக்கின்ற ஊற்றானது உலக மக்களுக்கு உணவாய் அமையும். அதுபோல, நல்ல குடிப்பிறப்பில் தோன்றியவர்கள், வறுமைநிலையில் வாடினாலும், தம்மிடம் வந்து பொருள் தருக எனக் கேட்பவர்க்கு இல்லை எனக்கூறாது, ஒப்புக்கொண்டு தம்மால் முடிந்தவரை கொடுத்து உதவுவார்கள்.

3rd_Tamil_Term 3.indd 27 25-08-2025 16:51:12

பயிற்சி

சரியான விடையைத் தெரிவு செய்வேன்

1. அந்நாளும் என்ற சொல்லின் பொருள் _____

(அ) வேறொரு நாளும் (ஆ) அடுத்த நாளும்

(இ) அத்தகைய நிலையிலும் (ஈ) எப்போதும்

2. இசைந்து இச்சொல்லின் பொருள் _____

(அ) மறுத்து (ஆ) பாடி

(இ) ஒப்புக்கொண்டு (ஈ) உதவி

3. உலகூட்டும் இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____

(அ) உல + கூட்டும் (ஆ) உலகு + கூட்டும்

(இ) உலகு + ஊட்டும் (ஈ) உலகூட்டு + உம்

வினாக்களுக்கு விடையளிப்பேன்

1. நல்வழி என்னும் நூலை எழுதியவர் யார்?

2. உலக மக்களுக்கு உணவாய் அமைவது எது?

3. நல்ல குடிப்பிறந்தாரின் இயல்பு எத்தகையது?

படம் பார்ப்போம்; அவை குறித்து எழுதுவோம்



_____

_____

_____

_____





_____

_____

3rd_Tamil_Term 3.indd 28 25-08-2025 16:51:12

8 பட விளக்க அகரமுதலி



பனிக்கரடி

உறைபனி சூழ்ந்த ஆர்க்டிக் பகுதியில் காணப்படும் விலங்கு. இது நீரிலும் நிலத்திலும் வேட்டையாடும். இதனைத் துருவக்கரடி எனவும் கூறுவர்.



பால்

சத்துமிக்க ஓர் உணவு. இதில் கால்சியம், பொட்டாசியம், புரதம் போன்ற சத்துகள் அடங்கியுள்ளன. உலகளவில் மிகுதியாகப் பால் உற்பத்தி செய்யும் நாடாக இந்தியா விளங்குகிறது.



பிண்ணாக்கு

தேங்காய், எள், கடலை போன்றவற்றிலிருந்து எண்ணெய் எடுத்தபின் மிஞ்சும் சக்கையே பிண்ணாக்கு. இது விலங்குகளுக்கு உணவாகப் பயன்படுகிறது.



பீர்க்கங்காய்

நார்ச்சத்துமிக்க காய்களுள் ஒன்று. இது தோல் நோயைக் குணப்படுத்தும். இது உடலுக்கு நல்லது.



புறா

முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும் பறவைகளுள் ஒன்று. இவை குச்சிகள், குப்பைகள் போன்றவற்றைக் கொண்டு கூடு கட்டுகின்றன. தானிய வகைகளை இரையாக உட்கொள்கின்றன.



பூண்டு

மருத்துவப் பயன்மிக்க ஓர் உணவுப்பொருள். இரத்தத்தில் உள்ள கொழுப்பைக் குறைக்கக் கூடியது.

3rd_Tamil_Term 3.indd 29 25-08-2025 16:51:13



பென்குயின்

குளிர் மிகுந்த பகுதிகளில் வாழும். இது பறவை இனத்தைச் சார்ந்தது. ஆனால் இதனால் பறக்க முடியாது. மனிதர் நடப்பதுபோல இதன் நடை அமைந்திருக்கும். நீரில் நன்றாக நீந்திச் செல்லும்.



பேரீச்சம்பழம்

இது பனைவகையைச் சார்ந்த மரத்திலிருந்து கிடைக்கின்றது. இது மருத்துவக் குணம் உடையது. இதில் இரும்புச்சத்து இருப்பதால், இரத்தசோகையை நீக்கும்.



பை

இது பொருள்களை எடுத்துச் செல்ல உதவுகிறது. துணி முதலான பொருள்களைக்கொண்டு உருவாக்கப்படுகின்றது. பல வண்ணங்களில் கிடைக்கிறது.



பொங்கல் விழா

இவ்விழா, தைமாதம் முதல்நாள் கொண்டாடப்படுகிறது. உணவுப் பொருள்களை விளைவிக்க உதவுவது இயற்கை. அதற்கு நன்றி செலுத்தும் வகையில் இதனைக் கொண்டாடுகின்றனர்.



போர்வாள்

பண்டைக் காலத்தில் மன்னர்கள் பயன்படுத்திய படைக்கருவிகளுள் ஒன்று. போரிடும் காலங்களில், வீரர்கள் இக்கருவியைப் பயன்படுத்துவர். கூர்மையாக இருக்கும்.



பௌவம்

கடலைக் குறிக்கும் ஒரு சொல். பூமியின் பெரும்பகுதி கடலாலேயே சூழப்பட்டுள்ளது. கடல் நீர் உப்புக்கரிக்கும். கடல் நமக்கு மீன், சிப்பி, நண்டு, முத்து, பவளம் முதலான வளங்களைத் தருகிறது.

3rd_Tamil_Term 3.indd 30 25-08-2025 16:51:14

வந்த பாதை

படத்தைப் பார்த்துத் தொடரை நிரப்புவோம்



படித்து விடை எழுதுவோம்



1. ஜானிடம் பேசியது யார்? _____
2. நந்தா எங்கே விளையாடுகிறான்? _____
3. கயல் எங்கே செல்கிறாள்? _____
4. நூலகத்திற்குப் பொருத்தமான தொடர் எது? _____

அ) வேகத்தடை உள்ளது ஆ) அமைதி காக்கவும் இ) பூக்களைப் பறிக்காதீர்

3rd_Tamil_Term 3.indd 31 25-08-2025 16:51:14

உரைப்பகுதியைப்படிப்பேன்;சரியானவிடையைத்தேர்ந்தெடுப்பேன்



மலர் பள்ளி முடிந்து வீடு நோக்கிச் சென்றாள். வழியில் சிறுவர்கள் நின்றிருந்தனர். அவர்களின் கையில் கற்கள் இருந்தன. வேலியில் இருந்த ஓர் ஓணானை அடிப்பதற்குக் குறிபார்த்துக் கொண்டிருந்தனர். மலர் அவர்களிடம் "ஓணானை அடிக்காதீர்கள், நம்மை அடித்தால் நமக்கு வலிக்கும். அதுபோல ஓணானுக்கும் வலிக்கும் அல்லவா? பிற உயிர்களைத் துன்புறுத்தலாமா?" என்றாள். அதைக்கேட்ட சிறுவர்கள் கற்களைக் கீழே போட்டனர். மலர் மகிழ்ச்சி அடைந்தாள்.

1. மலர் எங்கிருந்து வந்தாள்?

1. பள்ளி ☐ 2. வீடு ☐ 3. விளையாட்டுத்திடல் ☐

2. மகிழ்ச்சி என்ற சொல்லுக்கு எதிர்ச்சொல் எது?

1. இன்பம் ☐ 2. கவலை ☐ 3. கோபம் ☐

3. பத்தியிலிருந்து நீ அறிந்து கொண்டது என்ன?

1. உயிர்களைத் துன்புறுத்தல் வேண்டும் ☐

2. ஓணானை வைத்து விளையாடலாம் ☐

3. உயிர்களைத் துன்புறுத்தக் கூடாது ☐

3rd_Tamil_Term 3.indd 32 25-08-2025 16:51:16

என் பக்கம்

என்னுடைய பொழுதுபோக்கு





நான் விரும்பும் இடம் / பயணம்

ஏன் என்றால்...



எனக்கு மகிழ்ச்சி அளிப்பது...

ஏன் என்றால்...

3rd_Tamil_Term 3.indd 33 25-08-2025 16:51:17

அகரமுதலி

1)	இசைந்து	–	ஒப்புக்கொண்டு
2)	இயலவில்லை	–	முடியவில்லை
3)	இரை	–	உணவு
4)	உலுக்கியது	–	அசைத்து ஆட்டியது
5)	செம்மை	–	சிறப்பு
6)	பகைவர்கள்	–	எதிரிகள்
7)	பொழியும்	–	பெய்யும்
8)	வளமை	–	வளம்



3rd_Tamil_Term 3.indd 34 25-08-2025 16:51:21

கற்றல் விளைவுகள்

கேட்டல்	பேசுதல்	படித்தல்	எழுதுதல்
• கேட்டறியாத, எளிய சொற்களமைந்த பாடல்களையும் கதைகளையும் கவனத்துடன் கருத்தூன்றிக் கேட்டுப் புரிந்துகொள்வர். அவற்றின் மீதான கருத்தினை/நோக்கினை வெளிப்படுத்துவர். • தம்மைச்சுற்றி நடைபெறும் உரையாடல்களையும் விவரிப்புகளையும் கேட்டுப் புரிந்துகொள்வர். • வாய்மொழியிலான வருணனைகள், புதிர்கள், சொல் விளையாட்டு விதிமுறைகள் ஆகியவற்றைக் கேட்டுப் புரிந்துகொள்வர். • வானொலி/ தொலைக்காட்சி செய்திகளைக் கேட்டுப் புரிந்துகொள்வர்.	• அறிந்த/கேட்ட கதைகளைக் கலவைத்தொடரில் பேசுவர். • பாடல்களை இசையுடன் உரிய உணர்ச்சியுடன் பாடுவர். • கேட்டுணர்ந்த கதைகள், கதைப்பாடல்களின் தலைப்புகள், கதை மாந்தர்கள் பற்றி வினாக்கள் கேட்டும் கருத்தாடல் செய்தும் கருத்துகளை வெளிப்படுத்துவர். • தமக்கு அறிமுகமான செய்திகளையும் விவரங்களையும் சரியான ஒலிப்புடனும் தங்குதடையின்றியும் விவரித்துக் கூறுவர். • கேட்கும்/படிக்கும் கதை, கவிதை, செய்திகள் ஆகியவற்றைப் புரிந்துகொண்டு தங்கள் கருத்துகளால் வளப்படுத்துவர். • பண்புடன் உரையாடுவர்.	• தெளிவான ஒலிப்புடன் குறில் – நெடில், மயங்கொலிப் பிழைகளின்றிப் படிப்பர். • எளிய தொடர்களைத் தங்குதடையின்றிப் படிப்பர். • முற்றுப்புள்ளி, வினாக்குறி போன்ற நிறுத்தக்குறிகளை அறிந்து படிப்பர். • மூன்று அல்லது நான்கு தொடர்களைக் கொண்ட சிறுசிறு உரைப்பகுதிகளைப் படித்து வினாக்களுக்கு விடையளிப்பர். • சூழல் சார்ந்த புதிய சொற்களின் பொருள் புரிந்து படிப்பர். • படிக்கும் பகுதியில் இடம்பெறும் புதிய சொற்களைச் சூழல் அடிப்படையில் புரிந்துகொண்டு பிறகு அவற்றின் சரியான பொருளை அறிந்து பயன்படுத்துவர். • படிக்கும் பகுதியில் இடம்பெறும் பெயர்ச்சொல், வினைச்சொல் பதிலிப் பெயர்ச்சொல் போன்ற நுட்பங்களைப் புரிந்து படிப்பர். • கதை/செய்யுள்களில் உள்ள மொழியின் நுட்பங்களைப் புரிந்துகொள்வர், மாற்றி அமைப்பர்.	• உரிய வடிவத்தில் முறையான இடைவெளிவிட்டு எழுதுவர். • சொற்கள்/தொடர்கள்/ செய்தி/ உரைப்பகுதி / கதை / இதழ் ஆகியவற்றைப் படித்துப் பொருள் உணர்ந்து கருத்து தெரிவிப்பர், கேட்கப்படும் வினாக்களுக்கு விடை எழுதுவர். • புதிர்கள்,துணுக்குகளுக்கு விடை எழுதுவர். • அறிந்த சொற்களைக் கொண்டு, தமக்கான நடையில், நிறுத்தக் குறியீடுகள், எளிய வருணனைச் சொற்களைப் பயன்படுத்திச் சிறுசிறு தொடர்கள் எழுதுவர். • சரியான சொற்களைத் தேர்ந்தெடுத்துத் தொடர் அமைப்பு, நடை போன்றவற்றை மாற்றியமைத்து எழுதுவர். • கதை, பாடல்களைப் புரிந்துகொண்டு நீட்டித்து எழுதுவர்.

நடைமுறை இலக்கணமறிந்து பேச்சிலும் எழுத்திலும் பயன்படுத்துதல்	கற்கக் கற்கும் திறன்கள் (தானே கற்றல்)	சொற்களஞ்சியப் பெருக்கமும் சொல்லாட்சித் திறன்களும்
• எழுத்து வகைகள், இன எழுத்துகளை அறிந்து பயன்படுத்துவர். • பெயர்ச்சொல், வினைச்சொல், பதிலிப் பெயர்ச் சொற்கள் அறிந்து பயன்படுத்துவர். • உயர்திணை, அ:றிணை அறிந்து பயன்படுத்துவர். • ஒருமை, பன்மை வேறுபாடு அறிந்து பயன்படுத்துவர். • மயங்கொலிச் சொற்களின் வேறுபாடு அறிந்து பயன்படுத்துவர். • ஒத்த ஓசைச் சொற்கள் அறிவர்.	• சிறுவர்களுக்கான படவிளக்க அகரமுதலியைப் பயன்படுத்துவர். • கணினியில் குழந்தைகளுக்கான புதிர்கள், மொழி விளையாட்டுகளை விளையாடி மகிழ்வர். • படக்கதைகளைத் தேடிப் படிப்பர்.	கீழ்க்காணும் சொற்களைக் கற்றறிந்து பேச்சிலும் எழுத்திலும் பயன்படுத்துவர். • உணவுப் பொருள்களின் பெயர்கள் • ஆடை வகைகளின் பெயர்கள் • மரம், செடி கொடிகளின் பெயர்கள் • பொது இடங்களின் பெயர்கள் (பள்ளி, வங்கி, பேருந்து நிலையம், மருத்துவமனை) • தன் ஊர், மாவட்டம், மாநிலம், நாடு ஆகியவற்றின் பெயர்கள் • பழமொழிகள், மரபுத் தொடர்கள் • சிறுவர்களுக்கான படக்கதைகள் • சொல் விளையாட்டுகள் • பேச்சு வழக்கு, எழுத்து வழக்கு வேறுபாடுகள்

படைப்புத் திறன்கள்	விழுமியங்களை உணர்ந்தறிந்து பின்பற்றுதல்	வாழ்வியல் திறன்களை உணர்ந்தறிந்து செயல்படுதல்
• ஒரே எழுத்தில் தொடங்கும்/முடியும் பல்வேறு சொற்களை உருவாக்க அறிந்துகொள்வர். • கதையைத் தொடர்ந்து கூறிமுடிப்பர். • அறிந்த சொற்களைக் கொண்டு தன் சொந்த நடையில் கொடுக்கப்பட்ட தலைப்புகளுக்கு ஏற்ப எழுதுவர். • சொல் விளையாட்டுகளில் பங்கேற்பர். • பாடலைப் படித்துப் புரிந்துகொண்டு புதிய தொடர்களை / பாடல் வரிகளை உருவாக்குவர்.	• காலம் தவிர்க்காமை • தூய்மை பேணுதல் • விதிகளைப் பின்பற்றுதல் • பிறர்க்கு உதவுதல் • பிற உயிர்களிடத்தில் அன்பு காட்டுதல் • கூட்டுணர்வு • நட்புணர்வு • உண்மை பேசுதல் • சேமிப்பு உணர்வு • பொருள்களைப் பாதுகாத்தல் போன்ற பண்புகளைப் பின்பற்றுவர்.	• தன்னை அறியும் திறன் • சிக்கல் தீர்க்கும் திறன் • முடிவெடுக்கும் திறன் • கூர்சிந்தனைத் திறன் • படைப்பாக்கச் சிந்தனைத்திறன் • சிறந்த தகவல் தொடர்புத் திறன் • இணக்கமான உறவுக்கான திறன்கள் • பிறரை அவர் நிலையிலிருந்து புரிந்துகொள்ளும் திறன் • உணர்வுகளைக் கையாளும் திறன் • மன அழுத்தத்தைக் கையாளும் திறன் போன்றவற்றை உணர்ந்தறிந்து செயல்படுவர்.

3rd_Tamil_Term 3.indd 35 25-08-2025 16:51:22

தமிழ் – மூன்றாம் வகுப்பு

நூல் ஆக்கம்

கல்வி ஆலோசகர்

முனைவர். பொன். குமார்
இணை இயக்குநர் (பாடத்திட்டம்)
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை

மேலாய்வாளர்கள்

திருமதி ஆ.சே.பத்மாவதி,எழுத்தாளர்,
சென்னை.

திருமதி பா. மலர்விழி, விரிவுரையாளர்,
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
திருவூர், திருவள்ளூர்.

திரு சி. பன்னீர்செல்வம்,
கல்வி மாவட்ட ஒருங்கிணைப்பாளர்,
ஒருங்கிணைந்த கல்வி, புதுக்கோட்டை.

திரு இல. சீனிவாசன், முதுகலை ஆசிரியர்,
மஜ்ஹருல் உலும் மேனிலைப்பள்ளி,
ஆம்பூர், வேலூர் மாவட்டம்.

ஒருங்கிணைப்பாளர்கள்

முனைவர். கா.சா. மொழியரசி, முதல்வர்,
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
கீழப்பழுவூர், அரியலூர்.

திரு ந. இராமலிங்கம், உதவிப் பேராசிரியர்,
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை

தே.விமலா தேவி, விரிவுரையாளர்,
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
சென்னை

கலை மற்றும் வடிவமைப்புக்குழு

பக்க வடிவமைப்பு

சந்தோஷ்குமார் சக்திவேல்

வரைபடம்

கா. தனஸ் தீபக் ராஜன்
கா. நலன் நான்சி ராஜன்
ரா.ஷாலினி
வை.மை.பிராங்க் டஃப்
மதன் கங்காதரன்
பா. ரவிகுமார்,
வேல்முருகன்
பா. பிரமோத்
செ. ரமேஷ்குமார்.

தரக்கட்டுப்பாடு

ராஜேஷ் தங்கப்பன்

கி. ஜெரால்டு வில்சன், அருண் காமராஜ் ப

காமாட்சிபாலன் ஆறுமுகம்

பாடநூல் உருவாக்கக் குழு

திருமதி அர. அனுசுயா தேவி, இடைநிலை ஆசிரியை,
ஊ. ஒ. தொ. பள்ளி, சாலையம்பாளையம்,
விழுப்புரம் மாவட்டம்.

திருமதி பெ. முருகராணி, இடைநிலை ஆசிரியை,
ஊ. ஒ. தொ. பள்ளி, மருவத்தூர்,
பெரம்பலூர் மாவட்டம்.

திருமதி க. மல்லிகா, தலைமை ஆசிரியை,
ஊ. ஒ. தொ. பள்ளி, அயன்புத்தூர்,
திருவெறும்பூர், திருச்சி மாவட்டம்

திரு. பா.ச. குப்பன், இடைநிலை ஆசிரியர்,
ஊ. ஒ. தொ. பள்ளி, அய்யன்தாங்கல்,
காவேரிப்பாக்கம் ஒன்றியம், வேலூர் மாவட்டம்.

திரு. ஆ. மாணிக்கம், இடைநிலை ஆசிரியர்,
ஊ. ஒ. தொ. பள்ளி, ஆலங்குடி,
அறந்தாங்கி ஒன்றியம், புதுக்கோட்டை.

திருமதி. ந. பரிமளா, தலைமைஆசிரியர்,
அம்பத்தூர் நகராட்சித் தொடக்கப் பள்ளி, வரதராஜபுரம்,
வில்லிவாக்கம் ஒன்றியம், திருவள்ளூர் மாவட்டம்

திரு. வெ. பாலமுருகன், பட்டதாரி ஆசிரியர்,
அரசு மேல்நிலைப்பள்ளி, ஆரம்பாக்கம்,
திருவள்ளூர் மாவட்டம்.

திரு. ந. மாமலைவாசன், பட்டதாரி ஆசிரியர்,
அரசு மேல்நிலைப் பள்ளி,
இராயபுரம், திருவாரூர் மாவட்டம்.

திரு. வெ. ராஜா, இடைநிலை ஆசிரியர்,
ஊ. ஒ. ந.நி. பள்ளி இராக்கியாம்பட்டி,
கொங்கணாபுரம், சேலம்.

திருமதி பி கற்பகம் இடைநிலை ஆசிரியர்,
ஊ. ஒ. தொ. பள்ளி, ஐயப்பா நகர், வில்லிவாக்கம்,
திருவள்ளூர் மாவட்டம்

திரு. கு. மனத்துணைநாதன், இடைநிலை ஆசிரியர்,
ஊ. ஒ. தொ. பள்ளி, கீழ்வேளூர், நாகப்பட்டினம்.

திரு. பெ. கார்த்திகேயன், இடைநிலை ஆசிரியர்
ஊ. ஒ. தொ. பள்ளி, சிங்கிலியன் கோம்பை,
நாமகிரிப் பேட்டை ஒன்றியம், நாமக்கல் மாவட்டம்

EMIS தொழில்நுட்பக் குழு

இரா.மா.சதீஸ்
மாநில ஒருங்கிணைப்பாளர் தொழில்நுட்பம்,
கல்வி மேலாண்மை தகவல் முறைமை,
ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி இயக்ககம்.
இரா. அருண் மாருதி செல்வன்,
தொழில்நுட்ப திட்டபணி ஆலோசகர்,
கல்வி மேலாண்மை தகவல் முறைமை,
ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி இயக்ககம்.
க. ப. சத்தியநாராயணா,
தகவல் தொழில்நுட்ப ஆலோசகர்,
கல்வி மேலாண்மை தகவல் முறைமை,
ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி இயக்ககம்.

அட்டை வடிவமைப்பு

கதிர் ஆறுமுகம்

வடிவமைப்பு ஒருங்கிணைப்பாளர்

திரு. ம. அமல்ராஜ்

3rd_Tamil_Term 3.indd 36 25-08-2025 16:51:22



3rd Std - English Term 3.indd 53 25/09/2023 18:24:59


Preface

The English Language textbook has been designed to enable a fun filled and engaging experience in learning the language. The approach allows for a plenty of practices in the four language skills. It focuses on structure practice and vocabulary enrichment through a variety of language learning activities. These activities evoke interest and engage practice in the language and thus lead to retention.

As per NCF 2005, language is learnt effectively when it is taught with exposure in meaningful context rather than as a subject. In accordance with this, the textbook has been drafted with themes related or familiar to children. The units provide space for effective individual and pair work and thus allow the teacher to focus on time management in multi-level classrooms.

The textbook has been prepared with plenty of colourful illustrations to enhance its visual appeal for children. We hope that children will enjoy handling this textbook.

How to use the textbook



- The Term 3 - English book for standard III has three units.
- Each unit is planned for a month.
- Nila introduces each unit.
- Each unit is designed with the things in and around the home like the public places, trees and tools.
- Attractive illustrations create interest to learn the language.
- Look and say can be used to develop vocabulary and speaking skill.
- Let us sing can be used to develop listening skill and to recite the poem with a rhythm.
- Let us learn can be used to teach stories related to the theme.
- Let us understand is designed with exercises graded from simple to challenging for comprehension of the content.
- Let us know provides scope for teaching grammar in a context. It helps to learn grammar concepts inductively.
- Let us read is a self-reading text which develops the reading ability of the children.



- Let us use develops the ability of using structure.
- Circle time activity provides opportunity for the teacher to practise the structure through games and activities.
- Word wall can be used to know the sight words and the phonic words.
- Let us make develops listening skill of the children by following instructions and acting accordingly. This fun oriented activity provides opportunity to enhance their creativity.
- Big Picture is designed to enrich asking questions by using "Wh" words.
- I can do can be used for assessment of the content.
- Note to the teacher helps the teacher by highlighting some important suggestions.
- QR code motivates the teachers, the students as well as the parents to enrich the teaching learning process.

3rd Std - English Term 3.indd 54 25/09/2023 18:25:00




Unit 1—Our Leafy Friends

- Children are always eager to play around the trees. This unit helps them learn about the things they see around them.
- Look and say page helps children name some common trees around them.
- Let us practise teaches action words related to the trees.
- Let us use focuses on the structure "Do you have?" to help children ask for the things they need.

Unit 2—Tools We Use

- Children see many tools around them. This unit teaches about various tools.
- Look and say page helps children name some simple tools.
- Let us practise teaches children the actions done with the tools.
- Let us use focuses on the structure "What is the time?"





Unit 3—Places in my Town

- Children are always eager to visit the places around them. This unit helps children know more about the public places.
- Look and say page helps children name the places they see in every day life.
- Let us practise teaches action words related to the public places.
- Let us use focuses on the structure "Goodbye..." that helps children end a conversation with people.



Learning outcomes

- It is a moment of pride for children as they colour the balloons.
- This self-assessment tool helps boost their self -confidence.
- It is also a diagnostic page for the teacher to ensure that each student has attained the expected learning outcome in each unit.

3rd Std - English Term 3.indd 55 25/09/2023 18:25:03

Content

S.No	Unit	Page No.	Month
1.	Our Leafy Friends	41	January
2.	Tools We Use	61	February - March
3.	Places in my Town	81	March - April

OESPX

E-Book

XHEQY

Assessment


3rd Std - English Term 3.indd 56 25/09/2023 18:25:04

1 Our Leafy Friends



Let us recall

1. Name and colour the picture.



2. Read the words to your friend.

jug jam jack jade jet jump jill

3rd Std - English Term 3.indd 57 25/09/2023 18:25:04



Look and say



Coconut tree



Jack tree





Peepal tree

Fig tree



Tamarind tree

3rd Std - English Term 3.indd 58 25/09/2023 18:25:04



Note to the teacher:
